# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.148/2019**

## CNR.No.TNCB19000

Date: 11.06.2025 DW1

| பெயர் | வேணிகலா | வயது | 59 |
|---|---|---|---|
| த/பெ | சுந்தரமூர்த்தி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | புஜ்ஜங்கனூர் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 11th June 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்துக்கள் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் அவருக்கு பரம்பரையாக பாத்தியப்பட்டது. சுப்பைய கவுடருக்கு இரண்டு சம்சாரம் என்றால் சரிதான். முதல் மனைவியின் பெயர் ரங்கம்மாள். ரங்கம்மாள் மூலமாக சுப்பைய கவுடருக்கு காணிச்சாமி என்ற மகன் இருந்தார் என்றால் சரிதான். முதல் மனைவி ரங்கம்மாள் இறந்த பிறகு திருமக்காள் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். திருமக்காளுக்கு ஏற்கனவே தேசப்ப கவுடர் என்பவருடன் திருமணம் ஆகி தேசப்ப கவுடர் இறந்து விட்டார் என்றால் சரிதான். தேசப்ப கவுடர் மூலமாக திருமக்காளுக்கு மணி மற்றும் துரைசாமி ஆகிய மகன்கள் என்றால் சரிதான்.

சுப்பைய கவுடரை திருமக்காள் திருமணம் செய்த பிறகு அவர்கள் மூலம் பிறந்த சுந்தரமூர்த்தி என்பவர்தான் எனது கணவர் என்றால் சரிதான். சுப்பைய கவுடர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனது மகன் காணிச்சாமி என்பவருடன் மட்டும் 1969 ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனதுகணவர் சுந்தரமூர்த்திக்கு எந்த பங்கும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது கணவர் சுந்தரமூர்த்திக்கு என்ன வயது

என்றால் எனது கணவர் 1959 ல் பிறந்தார் என்பது தெரியும்.

க.ச.எண் 348 காளம்பாளையம் கிராமத்தில் மொத்தமுள்ள 5.88 ஏக்கரில் சுப்பைய கவுடருக்கு 2.90 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப்படி க.ச.எண்,348/1 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2.90 ஏக்கர் சொத்தை பொருத்துதான் வாதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். சுப்பைய கவுடர் பாகப்பிரிவினை செய்த பிறகு யாருடன் இருந்தார் என்றால் பாகப்பிரிவினை செய்யும்போதும் அதன் பிறகும் சுந்தரமூர்த்தியுடன் இருந்தார். காணிச்சாமி திருமணம் செய்து கொண்ட பிறகு தனியாகதான் இருந்தார்.

26.03.1987 ல் சுப்பைய கவுடரால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய சொத்தும் , உயில் எழுதியதாக சொல்லக்கூடிய சொத்தும் ஒரே நாளில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் சுப்பையகவுடர் எங்கு இருந்தார் என்றால் எங்களுடன் இருந்தார். கிரையம் செய்ததாக சொல்லப்படும் சமயத்திலும் உயில் எழுதியதாக சொல்லப்படும் சமயத்திலும் நாங்களும் உடன் இருந்தோம். பத்திரம் எங்கு தயாரிக்கப்பட்டது என்றால் பழனிச்சாமி என்ற பத்திர எழுத்தர் தயார் செய்தார். அவ்வாறு உயில் மற்றும் கிரைய பத்திரம் எழுதுவதற்கு யார் சொன்னார்கள் என்றால் எனது மாமனார் சொன்னார்.

எவ்வளவு நாட்களுக்கு முன்பு சொன்னார் என்றால் சுமார் 15 நாட்களாக பேச்சுவார்த்தை நடந்தது. அந்த சமயத்தில் திருமக்காளின் மகன்கள் மணி மற்றும் துரைசாமி சொத்தில் பங்கு கேட்டார்களா என்றால் மணி குடியிருந்த ஒரு பகுதியை மட்டும் கேட்டார். எனது மாமனார் மறுத்து விட்டார். அந்த சமயத்தில் திருமக்காள் எங்களுடன் இருந்தார். அதனால் அந்த சொத்தை மணியும் துரைசாமியும் வாங்கிக்கொள்வார்கள் என்ற எண்ணத்தில் தாவா சொத்தை உயில் மற்றும் கிரைய பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் மாமனாரால்தான் எழுதப்பட்டது.

தாவா சொத்தை இரண்டு முறையாக எழுதுவது குறித்து எனது மாமனார்தான் சொன்னார். தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையமாக எனது மாமனார் கொடுத்தாரா இல்லை அது சம்பந்தமாக விலையை பொறுத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா என்றால் எனது மாமனார் கிரையம் கொடுத்தார். அதற்கான கிரைய தொகை ரூ. 10,000/- த்தை நாங்களே கொடுத்ததன் அடிப்படையில் கிரையம் பெறப்பட்டது என்றால் எனது மாமனார் பாதுகாப்பிற்காக கேட்டதன்பேரில்

கொடுத்தேன். அந்த சமயத்தில் சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பின்னிட்டு மணி மற்றும் துரைசாமியால் பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சுப்பைய கவுடர் இறந்ததற்கு பிறகுதான் அவரது மனைவி திருமக்காள் இறந்தார் என்றால் சரிதான். சுப்பைய கவுடர் எந்தவிதமான பத்திரமும் செய்யாமல் இறந்திருந்தால் அவர் இறந்த பிறகு அவருடைய சொத்துக்கு வாரிசுகள் திருமக்காள் , காணிச்சாமி மற்றும் சுந்தமூர்த்தி ஆவார்கள் என்றால் சரிதான். திருமக்காள் இறந்த பிறகு திருமக்காள் சொத்துக்கு மணி , துரைசாமி மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். உயில் மற்றும் கிரைய பத்திரம் எழுதியபோது சாட்சிகளாக யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் ஆசிரியர் துரைசாமி மற்றும் எனது அம்மா பாக்கியவதி கையொப்பம் செய்தார்கள். அவர்களை எனது மாமனார் வரச்சொன்னார்.

வீட்டிலிருந்து தான் அனைவரும் பத்திர ஆபிசுக்கு சென்றோம். நீதிமன்றத்தில் அசல் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சான்றிட்ட நகலை பி.வா. சா. ஆ 2 மற்றும் 3 ஆக தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 மற்றும் 3 ஆவணங்களில் சுப்பைய கவுடர் கையொப்பம் செய்யவில்லை என்றால் அசல் ஆவணங்களில் கையொப்பம் உள்ளது. அசல் ஆவணங்களை தாக்கல் செய்திருந்தால் சுப்பைய கவுடரின் கையொப்பம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.